தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1975 மார்ச் 25

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Shift system in Schools and Colleges.

* 446 *Q.*—Thirumathi T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) the number of Colleges and High Schools in this State in which the shift system was introduced during 1972—73 and 1973-74 ; and

(*b*) the expenditure incurred on that account during those years ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

		1972–73.	1973–74
(அ)	கல்லூரிகள்	இல்லை.	இல்லை.
	உயர்நிலைப்பள்ளிகள்	26	23

(இ) இதற்காகத் தனிச் செலவு ஏற்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரை சட்டக் கல்லூரியில் இம் மாதிரி ஷிப்ட் சிஸ்டம் இப்பொழுது அமுலாகியிருக்கிறதே அதனுடைய அனுபவம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரக் குறிப்புக்களைத் தரலாம். உயர்நிலைப்பள்ளிகளில் மாத்திரம் வகுப்புகளைப் பிரிப்பதன் காரணமாக ஷிப்ட் முறை வைத்திருக்கிறோம். அதற்காகத் தனிச் செலவு ஏற்படவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, சில தனியார்க் கல்லூரிகளில் ஷிப்ட் முறை அனுசரிக்கப்படுவதாகத் தெரிகிறது. அனேக கல்லூரிகளில் தற்போது இட நெருக்கடி இருப்பதால் அங்கெல்லாம் இப்படிப்பட்ட ஷிப்ட் முறையைக் கொண்டுவர அரசு உத்தேசிக்குமா? உயர்நிலைப்பள்ளிகளிலும் இப்படிப்பட்ட முறையைக் கொண்டுவந்தால், புதிய பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு ஆகும் கட்டடச் செலவைத் தவிர்க்க அரசுக்கு வசதியாக இருக்குமல்லவா? ஆகவே, ஷிப்ட் முறையை விரிவுபடுத்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஷிப்ட் முறை வருவதை அரசு ஆதரிக்கிறது. இட நெருக்கடி காரணமாக அதிகமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படும்போது எந்த உயர்நிலைப்பள்ளியோ, எந்தக் கல்லூரியோ ஷிப்ட் முறை வைக்க முன்வருமானால், அதற்கு ஆதரவு தரும் வகையில் அரசு இருக்கும். வகுப்புகளைப் பிரித்து, அதிகமான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும், அதற்கும் அரசு அனுமதி அளிக்கும்.

திரு. கு. காமாட்சி : எல்லாக் கல்லூரிகளிலுமே ஷிப்ட் முறையைக் கொண்டுவராவிட்டாலும் மாலை நேரக் கல்லூரிகளிலாவது தொழிலாளர்கள் நிறைந்த பகுதியில் அவர்கள் கல்லூரிப் படிப்பு படிப்பதற்காக, ஷிப்ட் முறையைக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சில கல்லூரிகளில், மாலை நேர வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் குறிப்பிட்ட இடத்தில் போதுமான எண்ணிக்கை மாணவர்கள் வரக்கூடிய வாய்ப்பு வசதி இருந்தால், அதுபற்றி விண்ணப்பிப்பார்களானால், அரசு பரிசீலிக்கும்.

திரு. என். கே. பழனிசாமி : பி.காம்.—க்கு அதிக டிமாண்டு இருக்கிறது. உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர்கள் திறமையை வளர்த்துக்கொள்ள வசதியாக பி.காம். படிப்புக்கு ஷிப்ட் முறையைக் கொண்டுவர சென்னை பல்கலைக்கழகத்தில் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஷிப்ட் சிஸ்டம் இட நெருக்கடியைப் பொறுத்து வருகிற ஒன்று. பி.காம். வகுப்புகளைப் பல்கலைக்கழகத்தின் அனுமதியின்பேரில் பல்வேறு கல்லூரிகளில் நிறுவ வேண்டியிருக்கிறது. அதற்குப் போதுமான ஆசிரியர்களை உருவாக்கும் தன்மையைப் பொறுத்து பல்கலைக்கழகம் அனுமதி அளித்து வருகிறது. இட நெருக்கடியைப் பொறுத்து அந்த நிலைமைகள் ஏற்படவில்லை. சில குறிப்பிட்ட கல்லூரிகளில் போதுமான அளவு இட வசதி இல்லாத காரணத்தால் மேல் பட்டப் படிப்பு போன்றவைகளுக்கு அனுமதி தருவது இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் எந்தக் கல்லூரியாவது ஷிப்ட் முறையை வைக்க முன்வந்தால் அரசு அதற்கு ஆதரவு அளிக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS